*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2026** **24 ஜூலை 2026**

# பத்திரிகை செய்தி

வருமான வரித்துறை (தமிழ்நாடு& புதுச்சேரி) சார்பில்-167 -வது வருமான வரி தின விழா சென்னை கலைவாணர் அரங்கில் இன்று (24.07.2026) நடைபெற்றது. மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக விழாவில் கலந்து கொண்டு அதிகாரிகளுக்கு சிறந்த சேவைக்கான விருதுகளை வழங்கினார். மேலும், அதிக வருமான வரி செலுத்திய நபர்களுக்கும் நினைவு பரிசுகள் வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய துணைநிலை ஆளுநர், வருமான வரித்துறை அதிகாரியாக தான் பணியாற்றிய அனுபவத்தை பகிர்ந்து கொண்டார். வருமான வரியின் மூலம் பெறப்படும் நிதி நாட்டின் உள்கட்டமைப்பு, மருத்துவம், தொழில்துறை வளர்ச்சி, நலத்திட்டங்கள் மற்றும் இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகளை உருவாக்க பெரிதும் பயன்படுவதை குறிப்பிட்டு பேசினார்.